O.S. No: 87/2015

பெயர் :அனுசியா

**வா.சா. 6**

02-04-2025

**4, 13, 14 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் தோட்டகலை உதவி இயக்குநர் , கும்பகோணம் பணியாற்றுகிறேன். தோட்டகலை துணை இயக்குநர், தஞ்சாவூர் அவர்களுக்கு சம்மன் வந்தது. அவர்கள் அறிவுறுத்தலின் பேரில் நான் சாட்சி சொல்ல வந்தேன் . நான் சம்மனில் கண்ட சொத்துக்களை பார்வையிடவில்லை. நான் எக்ஸ் 1 இல் தென்னை மரம் மற்றும் பாக்கு வரமான கணக்கை தாக்கல் செய்துள்ளேன் . நான் சொன்ன அனைத்தும் ஹெக்டேர் மதிப்பாக சொல்லியுள்ளேன். பாக்கு, தென்னை மரத்திற்கான மகசுல் மற்றும் வருமான அளவு வருடா வருடம் மாறும் என்றால் ஆமாம் . ரகத்தை பொறுத்தும் விலை மாறுபடும். பயிர் மற்றும் செலவு தொகையும் வருடா வருடம் மாறும் என்றால் ஆமாம். பயிர் செய்த 7 வருடங்களுக்கு வருமானம் இருக்காது. செலவினம் மட்டும் தான் . 7 வருடத்திற்கு மேற்பட்டு மகசூல் வந்த பின் தான் வருமானம் கிடைக்கும். அதற்கான செலவுகளும் உண்டு. பாக்கு கன்றுகளுக்கான விலை 4 வருடத்திற்கு சராசரியாக நிர்ணயம் செய்து தாக்கல் செய்துள்ளேன் . பாக்கில் நெட்டை, குட்டை என்று இல்லை. ரகங்கள் உண்டு. அதிக மகசூல் மற்றும் குறைந்த மகசூல் கொடுக்கும் பாக்கு வகைகள் உண்டு . நான் என்ன வகைக்கு மதிப்பீடு கொடுத்திருக்கிறேன் என்றால் தோராயமாக நம் ஊரில் சாகுபடி செய்யும் வகைக்கு மதிப்பீடு கொடுத்திருக்கிறேன் . நான் கும்பகோணம் மற்றும் திருவிடைமருதூர் பகுதிகளை பார்க்கிறேன். பாக்கு ஒரு ஹெக்டேருக்கு 1111 மரங்கள் பயிரிடுவார்கள். ஆனால் இங்கே தென்னை மரத்திற்கு நடுவே ஊடு பயிராக போடுகிறார்கள். அவ்வாறு போட்டால் 1111 மரங்கள் வைக்க முடியாது. பாக்கு மரங்கள் இந்த பகுதியில் மகசூல் பெறுவதற்கும் , கடலோர பகுதியில் மகசூலில் வித்தியாசம் உண்டு என்றால் ஆமாம் . தென்னையில் நெட்டை , குட்டை, கலப்பினம் என்று வகைகள் உண்டு . நான் தென்னைக்கு கணக்கீடு எந்தாண்டு முதல் என்றால் காய்ப்பு தொடங்கியதில் இருந்து 10 ஆண்டுகள் வரை நன்கு மகசூல் கொடுக்கும். அதை கணக்கிட்டிருக்கிறோம். அதற்கு பின்பு மகசூல் குறைந்துவிடும். நெட்டை ரகம் என்றால் 7.5 மீ இடைவெளியிட்டு நடவேண்டும். அப்போது ஹெக்டேருக்கு 175 மரங்கள் நடலாம். குட்டை ரகம் என்றால் 6 மீ இடைவெளியில் 186 நடலாம். கலப்பினம் என்றால் இதே அளவுதான். தென்னை

மரத்தின் ஆயுள் நெட்டை ரகம் என்றால் 50 வருடம். குட்டை ரகம் மற்றும் கலப்பினம் 30 வருடம். பொதுவாக மரங்களை பராமரிப்பு செய்தால் தான் அதற்கு தகுந்த மகசூல் கிடைக்கும் என்றால் ஆமாம் . நான் வருமானம் தான் சொல்லியிருக்கிறேன். செலவு சொல்லவில்லை என்றால் சரி . பராமரிப்பு செலவு ஒரு ஹெக்டேருக்கு எவ்வளவு செலவாகும் என்றால் அறுவடைக்கே ஒரு வருடத்திற்கு 43000 ம் ஆகும் . ஒரு மரத்திற்கும் 50 ரூபாய் கேட்கிறார்கள் . வருடத்திற்கும் 5 மகசூல் என்ற வீதம் கணக்கிடப்பட்டுள்ளது. பாக்கு மரத்திற்கு ஒரு வருடத்திற்கு அறுவடைக்கு 7000 ம். பராமரிப்பு செலவு 10000 ரூபாய் ஆகும். ஒரு தென்னை மரத்திற்கும் 5 முறை மகசூல் எடுத்தால் 1350 ரூபாய் வருமானம் வரும் என்று நான் சொல்லியிருக்கிறேன் . மார்கெட்டில் விலை கூடினால் வருமானம் கூடும். நான் கொடுத்த கணக்கில் தென்னை மரம் நட்டது முதல் காய்க்கும் வரையான செலவை சேர்த்திருக்கிறேனா என்றால் சேர்த்திருக்கிறேன் . ஒரு ஹெக்டேரில் நான் சொன்ன அளவிற்கு மரங்கள் நடப்பட்டிருந்தால் 2,36,250/- வருமானம் வரும் என்று சொல்லியிருக்கிறேன் . பாக்கு மரத்திற்கு ஆண்டிற்கு ரூ5,83,275/-. ஒரு மரத்திற்கு 525 ரூபாய் வரும். தமிழ்நாடு அரசு நிர்ணயம் செய்த அளவுகளை தான் நான் வருமானமாக நிர்ணயம் செய்து சொல்கிறேனா என்றால் அவ்வாறு எதுவும் நிர்ணயம் செய்யப்படவில்லை. தென்னை மரங்களை பொறுத்து நம் ஊர்களில் கிடைக்கும் வருமானத்தை விட பொள்ளாச்சி , பட்கோட்டையில் அதிக வருமானம் கிடைக்கும் என்றால் ஆமாம் . தாவா சொத்துக்களில் எவ்வளவு தென்னை மரங்கள் மற்றும் பாக்கு மரங்கள் உள்ளது தெரியாது . நான் போய் பார்க்கவில்லை. தென்னை மற்றும் பாக்கு மரங்கள் நடுவதற்கு தோட்டகலையில் அனுமதி தேவையில்லை.

Sd (xxxx)

Types to my dictation in open Court, read over and interpreted to the witness. Admitted and acknowledged by him/her to be correct.

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.

/True Copy/

Sd (xxxx)
Additional District Judge,
Fast Track Court,
Kumbakonam.